# பூராயம்


BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர் ORU PAPER

Paper - 06 Issue - 117 17 Friday July 2009 PRICELESS இலவசம்

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

ஏற்றமிகு எம் மண்ணும்
எழிலார்ந்த அதன் வளமும்
மாற்றாரின் காலடியால் அழிவதோ - அதை
மறந்திங்கு உயிர் கொண்டு வாழ்வதோ?

படம்: சுரேன்

## நானும் தாடி வைத்த தமிழன் தான்!

*ஒரு பேப்பர்* 116ல், பூராயம் பகுதியில் 'கோடாலிக்காம்பு' என்ற தலைப்பில் எழுதியவர், ஈஸ்ட்ஹாம்மில், தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண் டாம் என தாடிக்காரத் தமிழர் ஒருவர் தடுத்ததாக எழுதியிருந்தார்.

நானும் தமிழன்தான் எனக்கும் தாடியிருக்கிறது, போதாதற்கு நான் ஈஸ்ட்ஹாம்மில்தான் வசிக்கிறேன். அப்ப நானும் அந்தக் கோடாலிக் காம்பாக இருக்கலாம்தானே. ஆனால் நான் தமிழ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தேன்.

ஏன் ஐயா அந்த கோடாலிக்காம்பின் பெயரைச் சொல்லாமல் எல்லாரை யும் சிக்கலுக்கு உள்ளாக்கிறியள், ஆகக் குறைந்தது தாடிக்கார தமிழ்க் கவுன்சிலர் என்றாவது எழுதியிருக்கலாமே?

*- அழகானந்தன், ஈஸ்ற்ஹாம்*

## இது தேவையா

*ஒரு பேப்பர்* ரில் நான் தொடர்ந்து வாசித்து வரும் பகுதிகளில் இரவி அருணாச்சலம் எழுதிக்கொள்வது என்ற பகுதியும் ஒன்று.

நாங்கள் துவண்டு விடும் தருணங் களில் தட்டிக் கொடுக்கும் வித மாகவும் ஆறுதல் தரும் விதமாகவும் அமையும் இரவி அவர்களின் எழுத்து நடையும் அதற்கொரு காரணம்.

அது போல எம் தமிழ்ச் சமூகங் களிடையே நடக்கும் தரக்குறைவான செயல்களைக் கண்டித்து எழுது வதற்கும் அவர் தவறியதில்லை.

ஆனால் கடந்த இதழில் அவர் எழுதியிருந்த விடயம் எனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

இன்றையசூழலில், எம்தமிழ்வீரர்கள் பலரைப் பறி கொடுத்து விட்ட காலப் பகுதியில், இலட்சக்கணக்கான எம் தமிழ் உறவுகள் வதை முகாம் களில் சிறைப்பட்டுள்ள நிலையில் புலத்திலே பிறந்த நாள் கொண்டாடிய ஒருவரைப் பற்றி எழுதியிருப்பதும் அந்தப் பிறந்த நாள் கொண்டாடப்பட்ட விதத்தை மெச்சியிருப்பதும் சரி என்று என க்குப் படவில்லை.

இரவி அவர்களின் ஆக்கங்கள் முன் போல தொடர்ந்து வர வேண்டும் என்பதே என் போன்ற வாசகர்களின் அவா.

*- விதுரன்*

## அதிர்ச்சித் தோல்வியல்ல, எதிர்பார்த்த தோல்விதான்?

கடந்த பேப்பரில், எழுபரிதி எழுதிய எத்தனை காலந்தான் நம்மை ஏமாற்றுவார்கள், அநபாயன் எழுதிய அத்தி பூத்தது போல் தமிழன் ஒன்றுபட்ட கதை போன்றவை நன் றாக இருந்தன.

அநபாயன் எழுதியது போல், கூட் டணித் தலைவர் அதிர்ச்சி தோல்வி யடையவில்லை. நான் அப்போது அங்கிருந்தபடியால் சொல்கிறேன், அவரது தோல்வி எதிர்பார்த்தது தான்.

*வாசகர்,(பூராயம் தொலை பேசியூடாக)*

## ஏன் எழுதுவதில்லை

ஈழத்தில் இன்றைய நிலை குறித்தும் குறிப்பாக வன்னியில் அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் அவ லங்கள் குறித்து இந்த நாடுகளில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத் திரிகைகள் பல தகவல்களைத் தொட ர்ந்து வெளியிட்டு வருகின்றன.

ஆனால் எம் தமிழ் ஊடகங்கள் அந்த அளவிற்கு இந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை.

சொந்தச் சகோதரர்களின் அவ லத்தைப் பற்றிய செய்திகளை நீங்கள் பிரசுரிக்கத் தயங்குவதன் காரணம் தான் என்னவோ

*- கரிகாலன், ஹறோ*

## ஊரை மறந்திட்டினமோ?

கொஞ்ச நாளாக் கொடி பிடிச்சுக் கொண்டு திரிஞ்ச சனம் எல்லாம் இப்ப ஏதோ ஊர்ப் பிரச்சினை தீர்ந்திட்ட மாதிரி பார்பகியூ பார்ட்டி எண்டும் பீச் எண்டும் பேத்டே பார்ட்டி எண்டும் சுத்தித் திரியுது.

அதுமட்டுமில்லாமல் அங்கை ஒரு நேரச் சாப்பாடு கூட ஒழுங்கா இல்லாமல் சனம் கஸ்டப்பட இங்கை பார்ட்டிகளிலை எவ்வளவு சாப் பாடு வீணா குப்பைக் கூடைக் குள்ளை போகுதெண்டதைப் பார்க்க வயிறெரியுது.

*- கனகம், மோர்ணிங்சைட்*

## ஆதிரை என்றொரு அகதி

தமிழ்நதி எழுதிய ஆதிரை என்றொரு அகதி, கவிதை மிகவும் உருக்கமான தாகவும் உண்மையானதாகவும் இருந்தது.

இப்படி பல விடயங்களை தெரிந் தெடுத்துப் பிரசுரிக்கிற *ஒரு பேப்பர்* ரை பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்த பேப்பர் எப்போது வரும் எனக் காத்திருக்கிறேன்.

*ராஜா, ஸ்காபுறோ*

## அறுக்க வேண்டாம்

போன மச்சான் திரும்பி வந்தான் என்பதாய் அறுவைப் பக்கம் திரும்பவும் எட்டிப் பார்க்கிறதே.

இப்போது இருக்கும் சூழலில் இந்தக் கண்றாவி தேவை தானா. தயவு செய்து அந்தப் பக்கத்தில் வேறு பயனுள்ள விடயங்களைப் பிரசுரியுங்கள்.

அது போல இலக்கியம் சம்பந்தமான விடயங்கள் *ஒரு பேப்பர்* ரில் அருகி வருகிறது.

முன்னர் வெளியான பழங்கள்ளு போன்ற பகுதிகளை திரும்பவும் சேர்த்துக் கொள்ளுங்கள்

*- அஞ்சலா, மார்க்கம்*

## நடிகர் திருமாவளவன் ஜேர்மனியில்

திருமாவளவன் ஏதோ ஒரு திரைப் படத்தில் நடிப்பதாக முன்பு கேள்விப் பட்டிருக்கிறேன்.

ஆனால் நிஜ வாழ்விலும் நல்லா நடிப்பார் என்பதை ஜேர்மனியில் நடந்த வாழ்வுரிமை மாநாட்டில் பார்த்தேன்.

ஈழத் தமிழருக்காய் அதைச் செய்தா ராம், இதைச்செய்தாராம். ஆளின்ரை கதையைக் கேட்டால், ஒப்பரேசன் சக்சஸ், ஆனால் பேசன்ட் தப்பேல்லை என்கிற மாதிரி இருந்தது.

இதுக்குத்தான் சொல்கிறது, கேட்கிற வன் கேணையானாயிருந்தால் எலி கூட ஏரோப்பிளேன் ஒட்டும் என்று.

*- சத்தீஸ், கோர்ணிங்*

*ஒரு பேப்பர்* தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற் கான இலக்கம் **020 7043 4314.**

*— ஒரு பேப்பர்காரன்கள்*

### வாசகர் கடிதம்

# கட்டுநாயக்கவில் கருணா குழுவின் சோதனைக் கெடுபிடிகள்

கொழும்பில் இருந்து வெளிநாடு செல்பவர்களும் வெளிநாட்டிலிருந்து கொழும்புக்கு வருபவர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, கருணா குழு உறுப்பினர்களால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக தமிழ்ப் பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

விமான நிலைய அதிகாரிகளின் அனைத்து சோதனைகளும் முடிவடைந்த பின்னர் விமானத்தில் ஏறுவதற்காக காத்திருக்கும் மண்டபத்தில் (Waiting room ) இருக்கும் தமிழ் இளைஞர் யுவதிகளை கருணா குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் தனியாக அழைத்துச் சென்று விசாரணக்குட்படுத்துவதாகவும், வெளிநாடு செல்வதற்காக முகவர்களிடம் பல இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து விமானத்தில் ஏற இருக்கும் நிலையில் இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதால் பல அசௌகரியங்களையும் பண இழப்பையும் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அது மட்டுமன்றி திருப்பி அனுப்பப்படும் நிலையில் அவர்கள் சிறீலங்கா காவல் துறையினராலோ இராணுவத்தினராலோ கைது செய்யப்பட்டு சிறைச் சாலையில் அடைக்கப்படும் அபாயமும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பிரச்சினைகள் யாவும் தீர்ந்து விட்டது என்று சிறிலங்கா அரசு பரப்புரை செய்தாலும், அண்மைய அவலங்களால் தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழர்களை, அகதிகளாக வெளிநாடுகள் ஏற்று வருவதால் இலங்கை அரசுக்கு பல நெருக்கடிகள் தோன்றியுள்ளதாகவும் அதனாலேயே இந்த விசாரணைகளும் கைதுகளும் மேற்கொள்ளப்படுவதாக நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்து விடுமுறைக்காக இலங்கை செல்லும் தமிழர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும். கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒவ்வொரு நாடுகளிலிருந்து வரும் பயணிகளை விசாரிப்பதற்கென தனியான தங்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டு அங்குள்ள தொலைக்காட்சிகளில் வெளிநாடுகளில் தமிழர்கள் நடத்திய போராட்டங்கள் திரையிடப்பட்டு பயணிகளில் எவரும் அக்காட்சியிலுள்ளார்களா என கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புறம்போக்குகள் வன்னிக்கு

கொழும்பிலும் அதனை அண்டிய புறநகர் பகுதியிலும் உள்ள பிச்சைக்கார்கள், ரவுடிகள், பிக்பொக்கட்காரர்கள், திருடர்கள் யாவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி முலைலைத்தீவுப் பகுதிகளை புனர்நிர்மாணிக்கும் வேலைகளுக்கு சிறிலங்கா காவல்துறையால் அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

அண்மையில் வெளிநாடுகள் வடக்கு கிழக்கு புனர்நிர்மாணத்துக்கென பணத்தை வழங்கியிருப்பதால், புனர்நிர்மாண வேலைகளில் தரகுகளை இராணுவ மேலதிகாரிகளும் அவர்களின் உறவினர்களும் ஏலத்தில் எடுத்து சமூக விரோதிகளையும் திருடர்களையும் வேலைக்கமர்த்தி கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதிகளிலுள்ள வீதிகளை திருத்துவதற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கும் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் நாளடைவில் அங்கு குடியேறி தமது குடும்பங்களையும் அழைத்து நிரந்தரமாகத் தங்கிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அது மட்டுமன்றி வீதிகளும் கட்டடங்களும் தரம் குறைந்ததாகவும் பாதுகாப்பற்றதாகவும் இருக்கும். மொத்தத்தில் ஒரு பெரும் மோசடி அங்கு நடைபெற்று வருகிறது.

*- பாஸ்கி பெர்னாண்டோ (வெள்ளவத்தை)*

தற்போது வாசகர் கடிதம் பகுதியில் பிரசுரிப்பதற்கான உங்களின் கருத்துக்களை தொலைபேசி வாயிலாகப் பதிவு செய்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

உங்கள் கடிதங்களையும் கருத்துக்களையும் **0207 043 4314** என்ற தொலை பேசி இலக்கத்திற்கு அழைத்துப் பதிவு செய்து கொள்ள முடியும்.

*— ஒரு பேப்பர்காரன்கள்*




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800